முழுப்பதிப்புரிமையுடையது

**இலங்கைக் கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்°**

**ஆரம்பப் பரீட்சை - 2014 ஜனவரி**

**(52) îçèÕóðáù°**
(Economics)

18.01.2014
பிற்பகல்
2.00 – 4.00

**நேரம் : 02 மணித்தியாலம்**

çæ°æñ°óðä° öú°úðæ°éæ: 07
ôðäèæ°æóðä° öú°úðæ°éæ

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்**
  - (1) இவ்வினாத்தாள் **A, B** என்னும் இரண்டு (02) பகுதிகளைக் கொண்டுள்ளது.
  - (2) கீழே காட்டியவாறு **ஐந்து (05)** வினாக்களுக்கு விடை அளித்தல் வேண்டும்:
    - **பகுதி A யிலுள்ள வினா இலக்கம் 01 இற்கும்**
    - **பகுதி B யிலிருந்து ஏதேனும் நான்கு (04) வினாக்களுக்கும்**
  - (3) **விடைகள்** யாவும் உமக்கு வழங்கப்பட்டுள்ள **விடைப்புத்தகத்தில்** நீங்கள் பரீட்சை எழுத விண்ணப்பித்த அதே **ஒரு மொழியிலேயே** எழுதப்படல் வேண்டும்.
  - (4) வரைபுத்தாள் வழங்கப்படும்.
  - (5) மொத்தம் 100 புள்ளிகள்.

---

## பகுதி - A

பல்தேர்வு வினாக்கள்
இந்தப் பகுதியிலுள்ள எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
40 புள்ளிகள்

**01.** கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் மிகவும் சரியான விடையைத் தரப்பட்டுள்ள (1), (2), (3), (4) என்னும் பதில்களிலிருந்து தெரிவுசெய்து உமது **விடைப்புத்தகத்தில்** வினாக்களைக் குறிக்கும் ஆங்கில எழுத்துக்களை எழுதி அவற்றிற்கு எதிரே தெரிவுசெய்த விடையின் இலக்கத்தை எழுதுக.

(A) ஒரு நாடு, வளையி **M N** ஆல் கீழே தரப்பட்டுள்ள இணைப்பில் (combinations) $x$ மற்றும் $y$ எனும் இரண்டு பண்டங்களை உற்பத்தி செய்யமுடியும்.




மேலேயுள்ள வளையி சுட்டிக்காட்டுவது,

(1) பண்டம் $y$ குறைந்து செல்லும் கிரயங்களின் (decreasing costs) நிபந்தனைகளின் கீழ் உற்பத்தி செய்யப்படுகின்றது.

(2) பண்டம் $x$ பண்டம் $y$ க்கு நிலைமாற்றுதலின் எல்லை வீதமானது (marginal rate of transforming) மாறிலி.

(3) பண்டம் $x$ இன் அதிகளவுத் தொகை உற்பத்தி செய்யப்படும்போது பண்டம் $y$ ஐப் பொறுத்தமட்டில் (in terms of Good $y$) பண்டம் $x$ இன் அமையச் செலவு (opportunity cost) உயர்ச்சியடையும்.

(4) பண்டம் $x$ இன் அதிகளவுத் தொகை உற்பத்தி செய்யப்படும்போது பண்டம் $y$ ஐப் பொறுத்தமட்டில் (in terms of Good $y$) பண்டம் $x$ இன் அமையச் செலவு வீழ்ச்சியடையும்.

(B) பொருளியலில் "தேவைகள்" (wants) தொடர்பில் மிகவும் சரியான கூற்றினைப் பின்வருவனவற்றிலிருந்து தெரிவுசெய்க.

(1) ஒரு நுகர்வோன் தனது வருமானத்திலிருந்து வாங்கிடத் திட்டமிடுகிற பொருட்களே தேவைகள் ஆகும்.

(2) உணவு, உறையுள், உடை என்பன தேவைகளுக்கான உதாரணங்கள்.

(3) தேவைகள் சகல தனிநபர்களுக்கும் பொதுவானவை.

(4) தேவைகள் நபருக்கு நபர் வேறுபடும்.

(C) கேள்வி விதி விளக்குவதாவது (The law of demand),

(1) ஒரு சந்தையில் கேள்விப்படுத்தப்படும் (demanded in a market) விலை மற்றும் தொகைகளுக்கிடையிலான தொடர்பு.

(2) வருமானத்தில் ஏற்படும் மாற்றத்தின் காரணமாக கேள்வியில் ஏற்படும் மாற்றம்.

(3) பண்டமொன்றுக்கான கேள்வியில் மாற்றம் காரணமாக மூலப்பொருட்களுக்கான கேள்வியில் மாற்றம்.

(4) வேறொரு பண்டத்தின் விலையில் மாற்றத்தின் காரணமாக பண்டமொன்றின் கேள்வியில் மாற்றம்.

(D) பின்வருவனவற்றுள் எதனுடைய பெறுபேறாக கேள்விக் கோடு இடப்புறத்துக்கு நகர்கின்றது?

(1) பண்டத்தின் விலையில் ஒரு வீழ்ச்சி

(2) இணைப்புப் பண்டமொன்றின் (complementary good) விலையில் ஒரு உயர்ச்சி

(3) இணைப்புப் பண்டமொன்றின் விலையில் ஒரு வீழ்ச்சி

(4) பிரதியீட்டுப் பண்டமொன்றின் (substitute good) விலையில் ஒரு உயர்ச்சி

(E) பின்வருவன நிரம்பலின் நெகிழ்ச்சியைத் (Elasticity of supply) தீர்மானிக்கும் காரணிகளாக கீழ்க் கண்டவை தரப்பட்டுள்ளன.

**(a)** உற்பத்திக் காரணிகளின் நகர்வுகள் (mobilization)

**(b)** இருப்புகளைப் பேணுவதற்கான ஆற்றல் (ability)

**(c)** பண்டமானது அத்தியாவசியமானது (necessity) அல்லது ஆடம்பரமானது (luxury)

**(d)** உற்பத்தி நிரம்பல் மாற்றுவதற்கு எடுக்கப்பட்ட நேரம் (time taken to change the supply of production)

மேற்கூறப்பட்டவற்றுள் நிரம்பல் நெகிழ்ச்சியைத் தீர்மானிக்கின்ற சரியான காரணிகள் அடங்கிய தொகுதி,

(1) **(a)**, **(b)** மற்றும் **(d)** மட்டும்.

(2) **(a)**, **(b)** மற்றும் **(c)** மட்டும்.

(3) **(a)**, **(c)** மற்றும் **(d)** மட்டும்.

(4) **(b)**, **(c)** மற்றும் **(d)** மட்டும்.

(F) மொத்தப் பயனானது உச்சமட்டத்தை அடையும்போது எல்லைப் பயன் (marginal utility),

(1) மாறிலி (constant)
(2) நேர் (positive)
(3) பூச்சியம் (zero)
(4) எதிர் (negative)

(G) பண்டமொன்றின் விலையில் ஏற்படும் ஒரு அதிகரிப்பு, அப்பண்டத்தின் கேள்வித் தொகையின் அதிகரிப்புக்கு இட்டுச்செல்லுமெனின் அப்பண்டம்,

(1) சாதாரண பண்டம் (Normal good)

(2) ஆடம்பரப் பண்டம் (Luxury good)

(3) இணைப்புப் பண்டம் (Complementary good)

(4) புறநடைப் பண்டம் (Giffon good)

(H) சந்தையொன்றில் **A, B, C** என்போர் மட்டுமே மூன்று நுகர்வோர்கள் ஆவர். அவர்களின் கேள்விப் பட்டியல் (demand schedules) பின்வருமாறு :

| **விலை (ரூ).** | **கேள்வித் தொகை** | | |
|---|---|---|---|
| | **A** | **B** | **C** |
| 5 | 200 | 100 | 300 |
| 10 | 150 | 75 | 200 |
| 15 | 125 | 50 | 150 |
| 20 | 100 | 30 | 100 |

ஏனைய காரணிகள் மாறாதிருக்கையில் விலை ரூ.15/- இலிருந்து ரூ.10/- இற்கு வீழ்ச்சியடை யுமேயாயின் சந்தையில் கேள்வித் தொகையில் ஏற்படும் மாற்றம்,

(1) 275 ஆல் அதிகரிக்கும்
(2) 100 ஆல் குறையும்
(3) 100 ஆல் அதிகரிக்கும்
(4) கேள்வித் தொகையில் மாற்றமில்லை

(I) கீழ்வரும் வரைபடம் அரிசிக்கான கேள்வி நிரம்பல் கோடுகளைக் காட்டுகின்றது. சமநிலை விலை (Equilibrium price) **P** ஆகும்.




அரசாங்கத்தால் $\mathbf{P_1}$ இல் உச்ச விலை விதிக்கப்படுகின்றதன் விளைவொன்றாக பின்வருவனவற்றுள் **பிழையான** கூற்றினைத் தெரிவுசெய்க.

(1) உச்ச விலைக்குப் பின்பு நிரம்பல் **OL** ஆகும்.

(2) கேள்வியானது **MN** ஆல் குறையும்.

(3) மிகை கேள்வி **LN** ஆகும்.

(4) கறுப்புச் சந்தை விலை $\mathbf{P_2}$ ஆகும்.

(J) பேரினப் பொருளியல் குறிக்கோள்களாக (macro economic objectives) கீழே உள்ளவை தரப்பட்டுள்ளன.

- **(a)** நிறைதொழில், சமத்துவம் (full employment, equity)
- **(b)** சென்மதி நிலுவைகள் சமநிலை (balance of payments equilibrium), விலை உறுதிப்பாடு (price stability)
- **(c)** மொத்த வெளியீடு (aggregate output), மொத்த நுகர்வு (aggregate consumption)
- **(d)** பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்தல் (acceleration of economic growth), நிலைபேறுடைய அபிவிருத்தி (sustainable development)

மேலேயுள்ளவற்றுள் சரியான பேரினப் பொருளாதாரக் குறிக்கோள்களைக் காட்டும் தொகுதி,

(1) **(a)**, **(b)** மற்றும் **(d)** மட்டும் (2) **(a)**, **(b)** மற்றும் **(c)** மட்டும்

(3) **(a)**, **(c)** மற்றும் **(d)** மட்டும் (4) **(b)**, **(c)** மற்றும் **(d)** மட்டும்

(K) பின்வருவனவற்றிலிருந்து வருமான வட்டப் பாய்ச்சலுக்குள் உட்செலுத்தப்படுவதை (injection into the circular flow of income) தெரிவுசெய்க.

(1) இறக்குமதிகள் (Imports) (2) சேமிப்புகள் (Savings)

(3) ஏற்றுமதிகள் (Exports) (4) வரிவிதிப்பு(Taxation)

(L) தேசிய வருமானம் (National income) தொடர்பில் பொருளாதாரமொன்றுக்கு சம்பந்தமுடைய கீழ்வரும் தகவல்கள் உங்களுக்குத் தரப்பட்டுள்ளன.

| | **ரூபா.**(பில்லியனில்) |
|---|---|
| சந்தை விலையில் தேறிய தேசிய உற்பத்தி | 45 |
| வரிகள் | 9 |
| மானியங்கள் (Subsidies) | 1 |
| ஏற்றுமதிகள் | 8 |
| மூலதன நுகர்வு (Capital Consumption) | 5 |
| இறக்குமதிகள் | 6 |

சந்தை விலையில் பொருளாதாரத்தின் மொத்தத் தேசிய உற்பத்தி (Gross National Product):

(1) ரூ. 36 பில்லியன் (2) ரூ. 50 பில்லியன்

(3) ரூ. 42 பில்லியன் (4) ரூ. 53 பில்லியன்

(M) 2012 ஆம் ஆண்டிற்கான இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கைக்கிணங்க 2012 இல் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி (economic growth),

(1) 8%. (2) 8.4%. (3) 6.4%. (4) 7.9%.

(N) “அண்மிய பணம்” (Near Money) என்பதனாற் கருதப்படுவது யாது?

(1) முகப் பெறுமதியை (face value) விட குறைந்ததான உண்மைப் பெறுமானம் (intrinsic value) உடைய பணம்
(2) நாணய அதிகாரமுடையவை (monetary authorities) களால் விநியோகிக்கப்படும் எல்லா தாள்களும் நாணயக்குற்றிகளும் (all notes and coins)
(3) இலகுவாகவும் விரைவாகவும் பணமாக மாற்றக்கூடிய சொத்துகள்
(4) முகப் பெறுமதியை விட அதிகமான அல்லது சமமான உண்மைப் பெறுமானத்தையுடைய பணம்

(O) வணிக வங்கிகளில் (commercial banks) மிகவும் திரவத் தன்மையான சொத்து பின்வருவனவற்றுள் எது?

(1) திறைசேரி உண்டியல் (2) கைக் காசு
(3) கடன்கள் (4) அரசாங்கப் பிணையிலுள்ள முதலீடுகள்

(P) குறிப்பிட்டதொரு ஆண்டிற்கான ஒரு நாட்டினது பண இருப்பின் தொகுப்பினை (composition) கீழே உள்ள அட்டவணை காட்டுகிறது.

| | **ரூபா.**(பில்லியனில்) |
|---|---|
| பொதுமக்களால் வைக்கப்பட்டுள்ள நாணயம் | 90 |
| அரசாங்கத்தால் வைக்கப்பட்டுள்ள கேள்வி வைப்புகள் | 280 |
| மத்திய வங்கியால் வைக்கப்பட்டுள்ள கேள்வி வைப்புகள் | 200 |
| வணிக வங்கிகளில் பொதுமக்களால் வைக்கப்பட்டுள்ள கேள்வி வைப்புகள் | 290 |
| வணிக வங்கிகளில் பொதுமக்கள் வைக்கப்பட்டுள்ள சேமிப்புகளும் வைப்புகளும் | 175 |

குறுகிய பண நிரம்பலானது (Narrow Money Supply ($M_1$) :

(1) ரூ.70 பில்லியன் (2) ரூ.465 பில்லியன்
(3) ரூ.380 பில்லியன் (4) ரூ.375 பில்லியன்

(Q) பணவீக்கத்தைச் சரியாக விளக்குகிற வாக்கியத்தைப் பின்வருவனவற்றிலிருந்து தெரிவுசெய்க.

(1) மிலங்கா விலைச் சுட்டியில் (Milanka price index) தொடர்ச்சியான அதிகரிப்பு
(2) இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களின் விலைகளில் தொடர்ச்சியான அதிகரிப்பு
(3) ஒரு நாட்டின் பொது விலை மட்டத்தில் தொடர்ச்சியான அதிகரிப்பு
(4) ஒரு நாட்டின் வட்டி வீதங்களில் தொடர்ச்சியான வளர்ச்சி

(R) “கட்டணம் (fee) என்ற பதத்தினால் கருதப்படுவது யாது?

(1) பெறப்பட்ட அல்லது பெறுவதற்குள்ள ஒரு நேரடியான நன்மைக்கான (direct benefit) கொடுப்பனவு
(2) அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட ஒரு கட்டாய கொடுப்பனவு
(3) பொதுப் பண்டமொன்றைப் பயன்படுத்துவதற்கான கொடுப்பனவு
(4) ஒரு தர்மமாக (charity) வருமானத்தின் ஒரு நிலையான விகிதத்திற்கான கொடுப்பனவு

(S) நேர் வரியின் அனுகூலமொன்றை (an advantage of direct tax) பின்வருவனவற்றுள் இருந்து தெரிவு செய்க.

(1) வரி ஏய்ப்பு (tax evasion is easy) இலகுவானது
(2) கொள்வனவுச் சக்தியை குறைக்கிறது
(3) விலை மட்டத்தை அதிகரிக்கப்பண்ணாது
(4) தனிப்பட்ட நுகர்வைக் குறைக்கும்

(T) "வெளிநாட்டு உதவி" (Foreign Aid) என்றால் என்ன?

(1) சலுகை நிபந்தனைகள் மீது வெளிநாடுகளாலும் மற்றும் சர்வதேச நிறுவனங்களாலும் வழங்கப்படும் கடன்கள்
(2) வெளிநாட்டு வணிக வங்கிகளிடமிருந்து அரசாங்கம் கடன் வாங்குதல்
(3) ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து பெறப்பட்ட கடன்கள்
(4) சர்வதேச நாணய நிதியிலிருந்து (IMF) பெறப்பட்ட கடன்கள்

(02 புள்ளிகள் வீதம் மொத்தம் 40 புள்ளிகள்)

## பகுதி - B

இப்பகுதியிலிருந்து **நான்கு (04)** வினாக்களுக்கு **மட்டும்** விடையளிக்குக.
60 புள்ளிகள்

**02.** (a) (i) மனித மூலதனம் (Human Capital) என்பதனாற் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

(ii) மனித மூலதனத்தின் **இரண்டு** (02) விசேட பண்புக்கூறுகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(b) பொருளாதாரத்தில் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள் (basic economic problems) எழுவதற்கான காரணங்களை விளக்குக. (05 புள்ளிகள்)

(c) அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்கின்ற பொருளாதார முறைமைகளை (economic systems) சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

**03.** (a) சந்தைச் சக்திகள் (market forces) எவ்வாறு சமநிலை விலையைத் தீர்மானிக்கின்றன என்பதை வரைபொன்றின் துணையோடு விளக்குக. (05 புள்ளிகள்)

(b) தனியுரிமையின் (monopoly) பிரதான இயல்புகள் (features) **ஐந்தினைப்** (05) பட்டியல் படுத்துக. (05 புள்ளிகள்)

(c) ஒரு தனியுரிமையாளன் எவ்வாறு தனது இலாபங்களை உச்சப்படுத்துவான் என்பதை (maximizes his profits) வரைபொன்றின் துணையோடு விளக்குக. (05 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

**04.** (a) உபேட்சை வளையி படம் (Indifference Curve Map) என்பதனாற் கருதப்படுவது யாது? (05 புள்ளிகள்)

(b) பயன்கோட்பாட்டில் உள்ள குறைபாடுகள் (weaknesses) **நான்கினை** (04) க் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(c) அத்தியாவசியப் பொருளொன்றிற்கான வரியொன்றை அரசாங்கம் விதிக்கும்பொழுது, அவ்வரி நுகர்வோனுக்கும் வழங்குவோனுக்குமிடையில் (consumer and the supplier) எவ்வாறு பகிரப்படுகிறது என்பதை வரைபொன்றின் துணையோடு விளக்குக. (06 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

**05.** (a) முடிவுப் பொருள் முறை (Final Product Method) மற்றும் பெறுமதிசேர் முறை (Value Added Method) ஆகிய பதங்களை விளக்குக. (04 புள்ளிகள்)

(b) 2012 ஆம் ஆண்டிற்கான ஒரு நாட்டின் தேசிய வருமானத்துடன் தொடர்புடைய தரவுகளைக் கீழ்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| | **ரூபா. (மில்லியனில்)** (நடைமுறை விலைகளில்) | |
|---|---|---|
| தனிப்பட்ட நுகர்வு | | 15,000 |
| அரசாங்க நுகர்வு | | 8,000 |
| தேய்மானம் | | 2,000 |
| வெளிநாட்டிலிருந்து தேறிய வருமானம் (net factor income from abroad) | | 1,000 |
| ஏற்றுமதிகள் | | 3,000 |
| இறக்குமதிகள் | | 3,300 |
| மொத்த முதலீடுகள் | | 7,000 |
| 2011 இல் மாறாத விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி | 18,000 | |
| விலைச் சுட்டி -150 | | |

மேலேயுள்ள தரவுகளைப் பயன்படுத்தி பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

(i) 2012 ஆம் ஆண்டிற்கான உள்ளூர் மொத்த உற்பத்தி (GDP) (04 புள்ளிகள்)

(ii) 2012 ஆம் ஆண்டிற்கான மெய் மொத்த உள்ளூர் உற்பத்தி (Real GDP)வளர்ச்சி வீதம். (03 புள்ளிகள்)

(c) தேசிய கணக்குகளின் (National Accounts) முக்கியத்துவங்கள் தொடர்பான **நான்கு** (04) விடயங்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)
(மொத்தம் 15 புள்ளிகள்)

**06.** (a) பண நிரம்பலை(supply of money)த் தீர்மானிக்கின்ற காரணிகள் **மூன்றைப்** (03) பட்டியல்படுத்தி அவற்றுள் **இரண்டினைப்** (02) பற்றி சுருக்கமாக விபரிக்குக. (06 புள்ளிகள்)

(b) பண நிரம்பல் மற்றும் பொது விலை மட்டம் (General Price Level) ஆகியவற்றுக்கு இடையேயுள்ள தொடர்பினை விளக்குக. (04 புள்ளிகள்)

(c) ஒரு நாட்டினது வட்டி வீத வீழ்ச்சியின் பின்விளைவுகள் (consequences) **ஐந்தினை** (05) குறிப்பிடுக. (05 புள்ளிகள்)
(மொத்தம் 15 புள்ளிகள்)

**07.** (a) அரசாங்க பாதீட்டின் நடைமுறைக் கணக்கு மிகையின் முக்கியத்துவத்தை (the importance of current account surplus of the Government) சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

(b) (i) அரசாங்கத்தின் "நடைமுறை மாறல்கள்" என்பதனால் (Current Transfers) கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

(ii) வீட்டுத் துறைக்குரிய (households) நடைமுறை மாறல்களுக்கான **மூன்று** (03) உதாரணங்கள் தருக. (03 புள்ளிகள்)

(c) "உட்கட்டமைப்பு வசதிகளில் (Infrastructure facilities) முதலீடு செய்வதற்கு தற்போது இலங்கை அரசாங்கம் முன்னுரிமை அளிக்கின்றது".

(i) இதற்கு நீங்கள் உடன்படுகிறீர்களா? உமது விடையை நியாயப்படுத்திட **இரண்டு** (02) உதாரணங்கள் தருக. (03 புள்ளிகள்)

(ii) அத்தகைய முதலீடுகளுக்கு **மூன்று** (03) காரணங்கள் தருக. (03 புள்ளிகள்)
(மொத்தம் 15 புள்ளிகள்)

- o0o -